நல்லூர் கிளை நூலகம்
24-10-1991

## ● இருபது நிமிடங்களில் சபை ஒத்திவைப்பு

# பாராளுமன்றில் எதிர்க்கட்சியினர் பெரும் ஆர்ப்பாட்டம்

நேற்றுக்காலை பாராளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தினால் சபை ஆரம்பமாகி இருபது நிமிடங்களிலேயே ஒத்திவைக்கப்பட்டது. சபாநாயகர் எம். எச் முஹமட் சபைக்கு வந்ததும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து கூச்சலிட்டனர். சபாநாயகருக்குஎதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன. சில எதிர்க்கட்சி எம். பிக்கள் முஹமட்டை நோக்கி காகிதங்களையும், புத்தகங்களையும் வீசினர். சபாநாயகர் முஹமட் சபைக்கு தலைமை தாங்குவதை ஏற்க முடியாது என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒருமித்து குரலெழுப்பவே முஹமட் சபையை ஒத்திவைப்பதாகக் கூறினார். எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியபோது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் செயலற்று இருந்தனர். இதனிடையே சபை ஒத்திவைப்பதற்கு முன்பாக முதல் 20 நிமிடங்களுள் 58 வரவு செலவுதிட்ட குறைநிரப்புப் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டதாகவும்

—04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு | விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 284 பிரசோறபத்தி ஐப்பசி 07 (24 - 10 - 1991) வியாழன்

# சங்குப்பிட்டிப்படையினர் நிலையைவிஸ்தரிக்க முயற்சி

## துருப்புக்கள் பரவலாகத் துப்பாக்கிச் சூடு நடாத்தினர்

சங்குப்பிட்டிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அப்பகுதியிலிருந்தவாறே பூநகரி கேரதீவுப் பகுதிகளை நோக்கி துப்பாககிச் சூடுகளை நடாத்திவருகின்றனர்.

படையினர் நேற்று மாலை வரை பரவலாகத் துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டபோதிலும் மாலைக்குப் பின்னர் எதுவிதத் தாக்குதல் சம்பவங்களும் இடம் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கௌதாரி முனைப் பகுதியில் நேற்றும் ஹெலிகள் மூலமாகத் தரையிறக்கப்பட்ட படையினர் அப்பகுதியில் மேலும் தமது நிலையை விஸ்தரிக்க முயல்வதாகக் கூறப்படுகிறது (07)

## மேலும் படையணிகள் கௌதாரி முனையில் இறக்கம்

கௌதாரி முனைப் பகுதியில் மேலும் ஒரு தொகுதி இராணுவ அணி தரையிறக்கப்பட்டுள்ளது.

இப் படையிறக்கத்திற்கு பெருமளவிலான பீரங்கிப்படகுகளும், விசைப்படகுகளும் உதவியில் ஈடுபடுத்தப்பட்டன

## கௌதாரிமுனைக் கடலில் கடற்படைப் பீரங்கிப் படகுகள்

கௌதாரிமுனைப் பகுதியில் இறக்கப்பட்ட இராணுவத்தினருக்கு உதவியாக அக் கடற் பகுதியில் சுமார் இருபது பீரங்கிப் படகுகள் நிற்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் பீரங்கிப் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதல் அகோரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது (01)

## யாழ் கொழும்புப் பயணிகள் இடைவழியில் நிற்கின்றனர்

வடக்கில் இருந்து கொழும்பு செல்வதற்காகப் போனவர்கள் ஊரடங்குச் சட்டம் காரணமாக ஓமந்தைப் பகுதியில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதை சேவையும் தடைப்பட்டுள்ளதால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணப் பகுதிக்கு வந்தவர்கள்

—04ஆம் பக்கம் பார்க்க

## 'வலம்புரி ஒபரேஷன்' அவர்கள் கூறும் காரணம்

கிடைத்தற்கரிதான வலம்புரிச்சங்கு தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ஷ்டத்தைகொண்டு வரும் ஒரு பொருள் என்ற நம்பிக்கையுண்டு. இதனாலேயே யாழ் குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை 'ஒபரேஷன் வலம்புரி' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் கேணல் சரத் முனசிங்க இவ்வாறு தெரிவித்தார்,

## பலாலி துப்பாக்கிச் சூடு

பலாலி இராணுவ முகாமிலிருந்து படையினர் நேற்று மாலை 6 மணியளவில் ஏழாலைப் பகுதியிலுள்ள குடியிருப்புக்களை நோக்கி கடுமையான துப்பாக்கிப்பிரயோகத்தினை மேற்கொண்டனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் சிவகுமார் (16) என்பவர் படு

—04ஆம் பக்கப் பார்க்க

## மண்ணித்தலை அகதிகள் மீது இராணுவம் சுட்டு ஒருவர் பலி

மண்ணித்தலை செபஸ்தியார் ஆலயப்பகுதியில் இருந்த அகதி மக்களை நோக்கி கௌதாரிமுனையில் நின்ற இராணுவம் சுட்டதில் 55 வயதான திருச்செல்வம் என்பவர் படு காயமடைந்து மரணமானார்.

அல்லைப்பிட்டியில் இருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து கௌதாரிமுனைப் பகுதிக்குச் சென்று திரும்பியவேளையே இச் சம்பவம் இடம்பெற்றது. (01)

## பூநகரி நோக்கி ஷெல் வீச்சு

## சிலர் காயமடைந்தனர்

சங்குப்பிட்டிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் அதிகாலை பூநகரிப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பூநகரிச் சந்தையடிப் பகுதியில் அதிகாலை ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்ததாகவும் தெரியவருகிறது.

இதனால் சந்தைப் பகுதியில் நின்ற சிலர் காயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவிலிருந்து பூநகரியை நோக்கி ஆட்லறி தாக்குதலும்இடம்பெற்றது06

### யாழ் மாவட்ட ஊரடங்கு நீக்கம்

யாழ் மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுப் பிற்பகல் 2 மணி முதல் நீக்கப்பட்டு விட்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகம் அறிவித்தது. இதேவேளை கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் ஊரடங்கு தொடர்ந்து அமுல் செய்யப்பட்டுள்ளது.

### பீரங்கித் தாக்கு

நேற்று முற்பகல் 11 மணியளவில் காரைநகர் கடற்படையினர் திருவடி நிலையப் பகுதியை நோக்கி கடுமையான பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டன. 01

### கப்பல் தயார்

கொழும்புத் துறைமுகத்தில் உணவுப் பொருட்கள். மருந்து வகைகள், தபால் பொதிகள் போன்றவற்றை ஏற்றிய நிலையில் கப்பல் ஒன்று தயாராக இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (03)

### தொண்டர்களுககு மண்ணெண்ணெய்

செஞ்சிலுவைச் சங்கதொண்டர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் நேற்று ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 30 ரூபாவுக்கு வழங்கப்பட்டது. (07)

### வீரமரணம்

நித்தியக்குளம் பகுதியில் செப்ரெம்பர் 25ஆம் திகதி நடைபெற்ற மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மைக்கல் (கந்தையா சுரேன், திருமலை) 23ஆம் திகதி அன்று வீரமரணமடைந்தார்,

## காங்கேசன் களஞ்சியத்திலிருந்த உணவை

# கடற்படை எடுத்துச் சென்றது!

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களைப் படையினர் எடுத்துச் சென்றுள்ளதாக அறியப்படுகின்றது.

இவ்உணவுப் பொருள்களை கடற்படைப்படகு ஒன்று ஏற்றிச் சென்றதாகவும் 5000 தொன் உணவுப் பொருள் காங்கேசன் களஞ்சியத்திலிருந்ததாகவும் தெரியவருகின்றது.

## தீப்புண்களுக்கு உடன் நிவாரணம் புதிய சிகிச்சை அறிமுகம்

தீப்புண்களுக்கு உடனே நிவாரணம் வழங்கும் வகையில் எங்கும் இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடியது 'சேவின் கிரீம்'.

தீப்புண்களின் வெப்பத்தை அகற்றி எரிச்சலுணத்தை உடனே கட்டுப்படுத்தும் தன்மை சேவிங் கிரீமுக்கு உண்டு என ஒக்லா கோமா கலாசாலை விரிவுரையாளர் டாக்டர் ரோபர்ட் புறூச்சகனன் தெரிவித்துள்ளார்.

தீப்புண்களைக் குளிர்ந்த நீரினால் கழுவிய பின்னர் சேவிங் கிரீம் பரவலாகப் பூசிக் கொண்டால் விரைவில் குணமடையும் எனத் தெரிவிக்கின்றார் அவர்.

## லெப். சிரஞ்சீவி போட்டிகள்

சுன்னாகம் முத்தமிழ் மன்றம் லெப். சிரஞ்சீவி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடாத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியின் கால் இறுதி ஆட்டம் ஒன்றில், ஈச்சமோட்டை சனசமூக நிலைய அணி அதனை எதிர்த்து ஆடிய இணுவில் கலை ஒளி விளையாட்டுக் கழகத்தினரை 4 ஓட்டங்களால் தோற்கடித்து அரை இறுதியாட்டத்தில் ஆடத் தகுதி பெற்றனர். (61)

## சங்கானை வான்தாக்குதலில் 30 லட்சம்ரூபா உடமைகள்சேதம்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற வான்தாக்குதலில் சேதமான வீடுகள், உடமைகளின் பெறுமதி சுமார் 30 லட்சம் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர், வட்டுக் கிழக்குப் பிரிவுபதில் கிராம சேவையாளர் ஆகியோர் சம்பவம் நடைபெற்ற சித்தங்கேணிப் பகுதிக்குச் சென்று சேதமான ஒன்பது வீடுகளையும் நேரில் பார்வையிட்டுச் சுமார் 30 லட்சம் ரூபா நஷ்டம் அவற்றுக்கு ஏற்பட்டிருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். (18)

## மாகாணக்கல்வி அமைச்சுக்கு 50 கோடி ரூபா நிதி

மாகாண சபைகளுக்கு கல்வி உயர்கல்வி அமைச்சு 50 கோடியினை ஒதுக்கியுள்ளது

அவசர கல்வி உபயோகத்திற்கு மாகாண சபைகள் இந்த நிதியைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரமும் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

### அடுத்த மகாநாடு

பொது நலவாய நாடுகளின் அடுத்த உச்சி மகாநாடு சைப்பிரஸ் தீவில் இடம்பெறவுள்ளது.

ஹாராரேயில் நடைபெற்ற பதினொராவது காமன்வெல்த் மகாநாட்டில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## மாணவர் முத்திரை

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான மே, யூன், யூலை மாத மதிய உணவு முத்திரைகள் இங்கு வந்து சேர்ந்துள்ளன.

இந்தஉணவு முத்திரைகளை மாணவர்களுக்கு வழங்கும் வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படுமெனவும் அறியப்படுகின்றது.

## சிவராசனுக்கு தமிழ் நாட்டில் பரந்தஅளவில் ஆதரவுஉண்டாம்

ராஜீவ் கொலையுடன் சம்பந்தப்படுத்தப்பட்ட சிவராசன், சுபா ஆகியோருக்குத் தமிழ் நாட்டில் பரந்த அளவில் ஆதரவாளர்களும், அபிமானிகளும் உள்ளனர் என்கிறார்சி.பி.ஐ அதிகாரி ஒருவர்.

இதனாலேயே இவர்களை உயிருடன் கைது செய்ய முடியாது போய்விட்டது எனவும் குறிப்பிட்ட அந்தப் பொலிஸ் அதிகாரி சென்னையிலிருந்து இந்த இருவரும் தமது மெய்ப் பாதுகாவலர்கள் சகிதம் பெற்றோல் பௌஸர் ஒன்றுக்குள் மறைந்து இருந்து பயணம் செய்து பங்களூருக்குத் தப்பிச் சென்றதாகவும் தெரிவித்துள்ளார்.

## மன்னாருக்கு நீர் மின்சாரம் மீண்டும்வழங்க நடவடிக்கை

மன்னாருக்கு லக்ஸபானா நீர் மின்சாரத்தை மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மின்சாரசபை அதிகாரிகளினால் எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது மன்னார் பட்டினத்துக்கு மட்டும் இருமணி நேரம் அனல் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

200 கே. வி. ஏ. வலு இயந்திரம் மூலம் மன்னார் நகருக்கு அனல் மின்சாரம் தற்பொழுது வழங்கப்படுகின்றது.

## அரச அடமான வங்கி 75 ஆயிரம் ரூபா கடன் வழங்கும்

அரச அடமான முதலீட்டு வங்கி குறைந்த வருமானமுடையோருக்கு விசேட வீடமைப்புக் கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்கான மூலதனத்தை வழங்கும்

வீடு அமைக்க, விஸ்தரிக்க, நவீனமயப்படுத்தவென இத்திட்டத்தின் கீழ் 75 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படும் 4200 ரூபாவுக்குக் குறைந்த மாத வருமானமுள்ளோரே இக் கடனைப் பெறலாம்.

1000 ரூபாவுக்கு 17 ரூபா மட்டுமே கடனுக்குரிய வட்டியாக அறவிடப்படும்.

## ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி சில்வா ஓய்வு பெறுகிறார்

ஸ்ரீலங்கா கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர் நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

புதிய கடற்படைத்தளபதி யார் என்பது குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை.

## வாகன வாடகைக்கான கூறுவிலை கோரல்

கொழும்பு, அனுராதபுரம், வவுனியா களஞ்சியங்களிலிருந்து பசளை. விவசாய இரசாயனப் பொருட்கள், மண்ணெண்ணெய் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் என்னால் குறிப்பிடப்படும் இடங்களுக்கு ஏற்றிவருவதற்கான லொறிக் கூலிக்கான கூறுவிலை லொறி உரிமையாளர்களிடமிருந்து 1991 நவெம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புமாறு கோரப்படுகின்றது.

### விண்ணப்பங்கள் பின்வரும் விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்

1) விண்ணப்பதாரியின் பெயரும், விலாசமும்.

2) ஒரே முறையில் வாடகைக்கு விடக்கூடிய லொறிகளின் எண்ணிக்கை.

3) கோரப்படும் லொறிக்கூலி.

3. 1 தொன் ஒன்றுக்கு ஒரு மைலுக்கான கூலி,

3. 2 முழுத்தூரத்துக்குமான கூலி.

கொழும்பு — புதுக்குடியிருப்பு/துணுக்காய்
அனுராதபுரம் — புதுக்குடியிருப்பு/துணுக்காய்
வவுனியா — புதுக்குடியிருப்பு/துணுக்காய்

4) தாமதக் கட்டணம் - நாளொன்றுக்கு

இ. தர்மகுலசிங்கம்
அரசாங்க அதிபர்,
முல்லைத்திவு மாவட்டம்.
10027

## சாரணியம் 'யாழ்போறி'

### இன்று 75வது ஆண்டுநிறைவு தினம்

யாழ் மாவட்டத்தில் சாரணியம் ஆரம்பிக்கப்பட்ட 75 வது ஆண்டு நிறைவு பவள விழா தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

சாரணியம் யாழ் மாவட்டத்தில் 1916 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 24 ஆம் திகதி ஜெ. வீ. மெண்டிஸ் என்பவரால் யாழ் சென் யோன்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ் இந்துக் கல்லூரி, யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி, சென் யோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகிய ஐந்து பிரபல கல்லூரிகளிலிருந்து 121 சாரணர்களுடன் ஆரம்பமானது. இன்று பவழவிழாக் காணும் சாரணியமானது யாழ்போறி என்னும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

### தினமும் தமிழோசை

லண்டன் பி.பீ.ஸி 'தமிழோசை' வாரத்தில் ஏழுதினங்கள் ஒலிபரப்பப்படவுள்ளது.

இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக தற்பொழுது கொழும்பு வந்துள்ள தமிழோசைத் தயாரிப்பாளர் ஆனந்தி தெரிவித்தார்.

## தீவக வைத்திய ஊழியர்களை யாழ் நகரில் கடமையாற்ற அழைப்பு

தீவுப் பகுதியிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றி அப்பகுதியை விட்டு வெளியேறிய ஊழியர்களை யாழ் போதனா வைத்தியசாலையிலும், அகதிமுகாம்களிலும் கடமையாற்றுமாறு யாழ் பிராந்திய சுகாதார பணிப்பாளர் கேட்டுள்ளார். 7


## சிறுவிளம்பரம்

### சனிமாற்றம்

வாக்கிய பஞ்சாங்கப்படி 28-10 91 மீண்டும் சனிமாற்றம் (தனுவிலிருந்து மகரராசிக்கு வக்கிரமடைந்த சனி மாற்றம்) ரூ 7/- எங்கும் விற்பனையாகின்றது. ரகுநாதன் பதிப்பகம், யாழ்ப்பாணம். (எழுதியவர்:- சுதர்ஸன்). 10030

★ கனேடியதமிழர், சுவிஸ்தமிழர், பிரான்ஸ்தமிழர் ......

# ‘அதிகரிக்கும் வெளிநாட்டுப்பயணம் தமிழர் சாகியத்தைப்பலவாக்கும்’

‘வட - கிழக்கில் இருந்து இளம் தலைமுறையினரின் வெளியேற்றம் நிச்சயம் பெரும் பாதிப்பை எதிர்காலத்தில் உண்டு பண்ணும்’ என்று கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இன்றைய சூழ்நிலையில் வடக்குக் கிழக்கில் மூளைசாலிகள் பற்றாக்குறை பெரும் குறையாக உள்ளது. முன்னொரு காலத்தில் எம் மத்தியில் இருந்த கல்விமான்கள், சாதனையாளர்கள் எல்லாம் தற்போது எங்கோ ஒரு நாட்டில் சேவை புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

முன்பெல்லாம் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என்ற சாகியங்களையே நாம் அறிந்திருந்தோம். இன்னும் 10 வருடங்கள் அதிகம் - கனடாத் தமிழர், பிரிட்டிஷ் தமிழர், ஜெர்மன் தமிழர், பிரான்ஸ தமிழர், இத்தாலித் தமிழர், நோர்வேத் தமிழர், டென்மார்க் தமிழர்... இப்படி ஏகப்பட்ட சாகியங்களைத் தமிழர் சமூகம் அடைந்து விடும் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## சபாநாயகருக்கு சங்கடம் வெளியில் மட்டுமல்ல!

சபாநாயகர் எம். எச். மொகமட் ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணையில் வழங்கிய தீர்ப்பு வெளியில் மட்டுமல்ல அவரது குடும்பத்திற்குள்ளும் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளதாம்.

சபாநாயகரின் மகன் மாநகர சபையில் உறுப்பினராக உள்ளார். இவர் மாகாண சபையில் பதவியொன்றை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தாராம்.

இதனால் தந்தையாரின் தீர்ப்பு மகனுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன், அவருக்கு எதிராக குரலெழுப்பவும் செய்துள்ளதாம்.

## க. பொ. த. சாதாரண பரீட்சை வட - கிழக்கிலும் நடைபெறும்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் மாதம் ஒன்பதாம் திகதி திட்டமிட்டவாறு ஆரம்பமாகவுள்ளது.

இப்பரீட்சைக்கு நாடெங்கணுமிருந்து 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றுவர்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் க பொ. த. சாதாரண தரப் பரீட்சை திட்டமிட்டவாறு நடாத்தப்படுமென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## பதவி

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் பிரதம ஆசிரியர் (செய்தி) பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

## பாலாவி கடலில் தாக்குதல் குருநகர் மீனவரைக் காணவில்லை

குருநகரிலிருந்து பாலாவிக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றோர் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மீனவர் ஒருவர் காணாமற் போய் விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் அதிகாலை பெரியவேலிக்கரை என்னுமிடத்தில் இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில் குருநகர் மத்திய மேற்கு வீதியைச் சேர்ந்த இன்னத்தம்பி சவிரியான் (40) என்பவரே காணாமற் போனவராவார்.

இவரது படகு முற்றாகச் சேதமடைந்துள்ளது. இவருடன் சென்ற சக தொழிலாளி நீந்திக் கரை சேர்ந்துள்ளார்.

## அளவையில் ரயில் விபத்து

### 3 புகையிரத ஊழியர்கள்பலி!

பொல்காவலைக்கு அடுத்துள்ள அளவை புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற ரயில் விபத்தில் மூவர் கொல்லப்பட்டனர், இருவர் படுகாயமடைந்தனர்.

கொல்லப்பட்ட மூவரும் புகையிரதப் பகுதி ஊழியர்களாவர். இந்த விபத்தில் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான மண்எண்ணெய்நாசமாகியதுடன் ஒருரயில்என்ஜினும் இரு பெட்டிகளும் பலத்த சேதமடைந்தன.

பிழையான சமிக்ஞையே ரயில் விபத்துக்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

### நிவாரணம்

தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கிளை யாழ்ப்பாணம் 556 கஸ்தூரியார் வீதியிலுள்ளவீடொன்றில் அமைந்துள்ள அலுவலகத்தில் உலர் உணவுப்பொருள்களைவழங்கி வருகிறது. (06)

## மிகப்பழையசிங்கர்மெஷின்: பரிசு தென்பகுதிக்கே!

சிங்கர் தையல் இயந்திர உற்பத்தியாளர்கள் தமது நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 140 வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு இலங்கையில் மிகப்பழைய சிங்கர் தையல் இயந்திரத்தை வைத்திருப்போரைத் தெரிவு செய்யும் போட்டியொன்றை நடாத்தியது.

இப்போட்டியில் 83 வருட பழமையான சிங்கர் இயந்திரத்தை வைத்திருந்தவருக்கு முதற் பரிசாக வைரத்திலான ‘புரூச்’ வழங்கப்பட்டது.

77 வருட பழமையான இயந்திர உரிமையாளர் இரண்டாம் பரிசையும், 72 வருட இயந்திர உரிமையாளர் மூன்றாம் பரிசையும் பெற்றுக் கொண்டனர்.

மிகப்பழமை வாய்ந்த சிங்கர் தையல் இயந்திரங்கள் பல வட பகுதியில் இருந்த போதிலும் தகுந்த விளம்பரங்கள், தொடர்புகள் இன்மையால் வடபகுதி மக்கள் இப்பரிசைப் பெறுவது தடுக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புலிகளிடம் இரு கப்பல்கள் உள்ளன என்கிறார் தளபதி

விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் இரண்டு நடுத்தர ரக சரக்குக்கப்பல்கள் சொந்தமாக உள்ளனவாம்.

ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா, கொழும்பில் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

‘இந்தக் கப்பல்களில் ஒன்று மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. மற்றைய கப்பல் மத்திய தரைக் கடலில் தற்போது நடமாடித் திரிகிறது பாதுகாப்புக் கருதி கப்பல்களின் பெயர்களைக் குறிப்பிட முடியாது’

இப்படித் தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி.

□ □

## ஐ. நா. சபைக்குள் புக முயன்ற சுழல் துப்பாக்கி நபர் கைது!

சுழல்துப்பாக்கி மற்றும் ஆயுதங்களுடன் ஐக்கிய நாடுகள் சபைக்குள் புகமுயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் எந்த நாட்டவர் என்பது பற்றிய விவரங்கள் எதுவும் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

இதனையடுத்து ஐ. நா. சபைக்கு வெளியே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

## இரத்தம் அவசியம் தேவை

‘யாழ் போதனா வைத்தியசாலை’இரத்த வங்கிக்கு சகல இன இரத்த வகைகளும் அவசியம் தேவைப்படுவதால் இரத்த தானம் செய்ய விரும்புவோர் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (04)

## குண்டு துளைத்ததாய் மாறிய அந்த வண்டு துளைத்த மாம்பழம்!

வண்டு துளைத்து சுவை கூட்டிய சாவகச்சேரி மாம்பழங்கள் இன்று குண்டு துளைத்து வீணாகும் நிலையுருவாகி விட்டதே என்று கவலையுறுகிறார் தற்பொழுது கொழும்பு வந்துள்ள லண்டன் பி. பி. ஸி. தமிழோசைத் தயாரிப்பாளர் திருமதி ஆனந்தி சூரியப் பிரகாசன்.

‘புதுடில்லியின் மாம்பழ விழா குறித்து ஓர் ஐந்து நிமிடச் சித்திரம் ஒன்றினை நான் ஒலிபரப்பினேன். அதில் மாம்பழங்களின் வகைகள் கறுத்தக் கொழும்பான், வெள்ளைக் கொழும்பான்...... என்றெல்லாம் எடுத்துக் கூறி, அவற்றின் இனிமையையும் கூறினேன். என்றாலும் வண்டு துளைத்த சாவகச்சேரி மாம்பழத்தின் சுவைக்கு ஈடுஇணை இல்லை என்றும் அதில் குறிப்பிட்டிருந்தேன்’.

சில நாட்களின் பின் எனக்கு ஒரு கடிதம் வந்தது. ‘மாம்பழ விழாச் சித்திரம் நன்றாக இருந்தது அதில் நீங்கள் வண்டு துளைத்த சாவகச்சேரி மாம்பழத்தின் சுவையைக் குறிப்பிட்டிருந்தீர்கள்

அக்கா! இப்போது இங்கு வண்டுதுளைத்த மாம்பழம் இல்லை. குண்டு துளைத்த மாம்பழம் தான் இருக்கிறது’ என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

பெயர் குறிப்பிட விரும்பாத 12 வயதுச் சிறுவன் அக்கடிதத்தை எனக்கு எழுதியிருந்தான். இந்தக் கடிதம், அது கூறிய தாற்பரியம் என்னை வெகுவாகப் பாதித்து விட்டது. உண்மையில் நான் அழுதே விட்டேன்’.

என்று கொழும்பில் நடந்த நிகழ்ச்சியொன்றில் தன் பிறந்த மண்ணை மறக்க முடியா நிலையை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்தினார் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழோசை ஆனந்தி.

## இலவச பால்மா விநியோகம் அடுத்தவருடத்துடன் நிறுத்தம்

வைத்தியசாலைகளில் குழந்தைகளுக்கு இலவசமாக பால்மா வழங்கும் திட்டம் அடுத்த வருடத்துடன் நிறுத்தப்படவுள்ளது.

குழந்தைகளுக்கு தாய்ப் பால் ஊட்டுவதை மேலும் ஊக்குவிக்கும் முகமாகவே இந்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது

‘யுனிசெப்’ நிறுவனத்தின் உதவியுடன் உலகளாவிய ரீதியில் அடுத்தவருடம் முதல் இந்த இலவச பால்மா நிறுத்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்.

எனினும் 12 நாடுகள் இந்த வருடமே இதனை நடைமுறைப்படுத்த முன் வந்துள்ளன.

### தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் இல்லையாம்!

# பாராளுமன்றத்திற்கு பிரபாகரன் வரக்கூடியதாக சட்டம் உள்ளது

ஸ்ரீலங்காவின் தேர்தல் சட்டம் பாராளுமன்றத்தில் எவரையும் நியமிப்பதற்கு இடம் கொடுக்கிறது எனத்தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சித் தலைவர் தினேஷ் குணவர்தனா எழுப்பிய ஆட்சேபனைக்கே தேர்தல் ஆணையாளர் இவ்வாறு பதிலளித்துள்ளார்,

தேர்தல் சட்டத்தின்படி தேர்தல் ஆணையாளருக்கு பெருமளவிலான அதிகாரம் இல்லை. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூட பாராளுமன்றத்திற்கு வரக்கூடிய அளவுக்கு எமது தேர்தல் சட்டம் உள்ளது என சில்வா மேலும் தெரிவித்தார்.

## உள்விவகாரத் தலையீடு ‘சார்க்’இல் விவாதிக்கப்படும்?

எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சார்க் மாநாட்டில் உறுப்பு நாடுகளின் உள்விவகாரங்களில் மற்றையநாடு தலையீடு செய்வதைத்தடுக்கும் ஓர்பிரேரணையும் கொண்டு வரப்படலாம் என கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

ஏற்கனவே மாலைதீவு ஜனாதிபதி கயூம் முன்வைத்த ‘சிறியநாடுகளின் பாதுகாப்பு’ தொடர்பான யோசனையும் விவாதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## போலி பாஸ்போர்ட் தயாரித்த பெண் டில்லியில் கைது

புதுடில்லியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த இலங்கைத் தமிழரான நிர்மலா செல்வராஜா என்ற பெண்மணி இந்திய புலனாய்வுத் துறையினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து பல போலி பாஸ்போர்ட்களும்மற்றும் பிரயாண ஆவணங்கள், றபர்சீல்கள் என்பன மீட்கப்பட்டதாம். இவர் பலரை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண் 1984முதல் ஜேர்மன் பாஸ்போர்ட்டுடன் புதுடில்லியில் தங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வின்சன்ற் பெரேரா மீது மற்றுமோர் குற்றச்சாட்டு

ஐ.தே.க அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த கே. வின்சன்ற் பெரேரா மற்றும் அவரின் ஆறு நண்பர்களுக்கும் எதிரான கள்ள நோட்டு அச்சடித்ததற்கான குற்றச்சாட்டு கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படுகிறது.

நீதிபதி சிரானி திலகவர்தனா முன்னிலையில் வின்சன்ற் பெரேரா ஆஜர் செய்யப்பட்டார். இவர் ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகளை தயாரித்து பாவனைக்கு விட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல வின்சன்ற் பெரேரா உதவினார் என ஏற்கனவே மற்றுமோர் குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே

## அடையாள அட்டை முறைப்பாடு 10ரூ. முத்திரை தேவையில்லை

யாழ் மாவட்டத்தில் உள்ளவர்கள் தேசிய அடையாள அட்டை தொலைந்து போனால், இராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்யும் போது 10 ரூபா முத்திரை ஒட்டத்தேவையில்லை என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் யாழ் செயலகத்துக்கு அறிவித்துள்ளார்

இது தொடர்பான கடிதம் யாழ் செயலக ஆட்பதிவுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தரால் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் கடித மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவரம் தெரியாததால் பலர் 10ரூபா முத்திரை ஒட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 25

## வேலணை ஆலயத்தில் தீவுப்பகுதி அகதிகள்

வேலணைமுடிப்பிள்ளையார் கோயிலில் தீவுப்பகுதி அகதிகள் படையினரால் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஆயிரம் பேர் இக் கோயிலில் தங்கியுள்ளனர்.

கோயிலில் தங்க வைக்கப்பட்டவர்கள் வெளியிடங்களுக்குச் செல்ல இராணுவம் அனுமதி அளிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. 01

## செஞ்சிலுவை வாகனம் மின்கம்பத்துடன் மோதியது

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்குச் சொந்தமான வயவர்லெஸ் பொருத்தப்பட்ட வாகனம் மின்கம்பத்துடன் மோதியதில் அவ்வாகனம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

அவ்வாகனத்தைச் சர்வதேச சப்பிரதிநிதியே ஓட்டிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் மயிரிழையில் காயமின்றி உயிர்தப்பினார். 07

## யாழ் ஆஸ்பத்திரிக்கு அடுத்த கப்பலில் மருந்துகள்

யாழ் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துப் பொருள்களுடன் ஒரு கப்பல் இந்த வார இறுதியில் இங்கு வந்து சேரும் என சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் தெரிவித்துள்ளனர்.

தரைமார்க்கமாக மருந்து கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் அந்த நடவடிக்கை சாத்தியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

## அடுத்த ஆண்டு முதல் வீடுகளில் தபாற் பெட்டிகள்

அடுத்த ஆண்டுமுதல் வீடுகள அலுவலகங்கள் தோறும் தபாற் பெட்டிகள் வைப்பதற்கு தபால் தொலைத் தொடர்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

மக்களுக்குத் தபால்கள் துரிதமாகக் கிடைப்பதற்கும் தபால் விநியோகத் தாமதத்தைத் தவிர்க்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதலில் கொழும்பு நகரில் இது அமுல்படுத்தப்படவிருப்பதாகவும் அதன் பின்னர் நாடு முழுவதிலும் செயல்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

## காமினியின் மைத்துனர் வீடு பொலிஸாரால் சோதனை

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவின் மைத்துனரான டாக்டர் விக்கிரமசிங்கா கொள்ளுப்பிட்டி வீட்டை இரகசியப் பொலிஸாரும், பொலிஸாரும் சோதனையிட்டனர்.

அவுஸ்திரேலியாவில் வாழும் டாக்டர் விக்கிரமசிங்கா அமுலாக்கல் அமைச்சின் செயலாளராக ஜே. ஆர். காலத்தில் பணிபுரிந்தார்.

ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையைத் தயாரிக்க இவர் அவுஸ்திரேலியாவில் இருந்து கொழும்பு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

யாழ்

இளிநொச்சிப் பகுதியில் நிற்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (6, 7)

## சமூகம் தரவும்

ஆறுகால்மட அறிவொளி சனசமூக நிலைய சகல முதலுதவி சிகிச்சை அங்கத்தவர்களையும் இன்று காலை 10 மணிக்கு நிலையத்திற்கு வருமாறு கோரப்பட்டுள்ளது. (01)

## கைதிகள் கைவிட்டனராம்

களுத்துறை சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம் இருப்பதாகவெளிவந்த செய்தியை பாதுகாப்பு அமைச்சு ஒப்புக்கொண்டுள்ளது.

களுத்துறை சிறையில் 248 கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். இம்மாதம் 11 ஆம் திகதி இவர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்து மறுநாள் 12ஆம் திகதியுடன் முடித்துக்கொண்டனர் எனக் குறிப்பிடும் பாதுகாப்பு அமைச்சு, இக் கைதிகளில் 24 பேர் மீண்டும் இரண்டாவது முறையாக உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தனர். அப்போது ஏனைய கைதிகள் இவர்களுக்கு இரகஸியமாக உணவு கொடுத்தனர்.

உண்ணாவிரதம் இருந்த 14 கைதிகளும் பின்னர் தனியான ஓர் இடத்துக்கு மாற்றப்பட்டனர் இதனை ஆட்சேபித்து மற்றைய கைதிகள் உண்ணாவிரதம் இருந்தனர். எனினும் இப்போது அனைத்து கைதிகளும் உண்ணாவிரதத்தை கைவிட்டுள்ளனர் என தெரிவித்துள்ளது.

கைதிகளில் சிலர் கவலைக்கிடமாக இருக்கின்றனர் எனவும் கைதிகள் விசாரணையின்றி இருக்கின்றனர் எனவும் வெளியான செய்திகள் தவறு எனவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## கூட்டம்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பல நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் அனைவரையும் இன்று 24ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு யாழ் மாவட்ட கூட்டுறவுச் பகுதியினர் கேட்டுள்ளார்கள்.

---

பலாலி...

காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (07)

---

பாராளுமன்றத்தில்...

இப் பிரேரணைகளை தம்மால் ஏற்கமுடியாது என எதிர்க்கட்சியினர் நிராகரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகருக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரப்போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம் பி ரிச்சர்ட் பத்திரன பின்னர் தெரிவித்தார். முஹமட் தலைமைதாங்கும் சபை நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் தொடர்ந்து பகிஷ்கரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சவீதி ‘லக்ஷ்மி பில்டிங்’இல் உள்ளஅச்சகத்தில் 24.10.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.